A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 19 / 2022</u>**

திரு. ஜி.ரமேஷ்,
த/பெ. கோவிந்தன்,
எண் 87, கரட்டுகாடு,
கோணசமுத்திரம் அஞ்சல்,
எடப்பாடி வட்டம்,
சேலம் மாவட்டம் – 637 102. ………மேல்முறையீட்டாளர்
(திரு. ஜி.ரமேஷ்)

எதிர்

1) உதவி மின்பொறியாளர்/கொங்கணாபுரம்,
மேட்டூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
1/3-8A1, கொங்கணாபுரம்,
எடப்பாடி – 637 102.

2) உதவி செயற்பொறியாளர்/புறநகர்/எடப்பாடி,
மேட்டூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS campus, சேலம் மெயின் ரோடு,
எடப்பாடி – 637 105.

3) செயற்பொறியாளர்/ எடப்பாடி,
மேட்டூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS campus, சேலம் மெயின் ரோடு,
எடப்பாடி – 637 105.

…… எதிர்மனுதாரர்கள்
(திரு M. கிருஷ்ணமூர்த்தி, உதவி மின்பொறியாளர்/கொங்கணாபுரம்
திரு R. ஸ்ரீனிவாசன், உதவி செயற்பொறியாளர்/புறநகர்/எடப்பாடி)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 21-02-2022</u>**

**<u>கேட்புரை நாள்: 14-07-2022</u>**

**<u>ஆணை நாள்: 25-07-2022</u>**

21.02.2022 அன்று பெறப்பட்ட திரு. ஜி.ரமேஷ், த/பெ. கோவிந்தன், எண் 87, கரட்டுகாடு, கோணசமுத்திரம் அஞ்சல், எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம் – 637 102 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 19/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 14.07.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண் 113–009–2321–இல் கூடுதல் மின்பளு தொகையை தள்ளுபடி செய்யுமாறும், வைப்பு தொகையை திரும்ப வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண்ணில் அதிகபடியாக மின்சாரம் உபயோகப்பட்டதாக தெரிவித்து ரூ.82,949/– தொகையை செலுத்துமாறு கடிதம் மூலம் தனக்கு தெரிவிக்கப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 இது குறித்து மின்வாரிய அலுவலகத்தில் விசாரித்த போது தணிக்கை குழுவினரால் விதிக்கப்பட்ட அத்தொகையை செலுத்துமாறு எதிர்மனுதாரர் கூறியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே மேற்கூறிய தொகையை தள்ளுபடி செய்யுமாறு மேல்முறையீட்டாளர் மேட்டூர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், மேட்டூர் மின்பகிர்மான வட்டம், தனது மனுவின் மீது எந்தஒரு நடவடிக்கை எடுக்காததால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **<u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>**:

3.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 14.07.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

3.2 மேல்முறையீட்டாளர் திரு. ஜி.ரமேஷ் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

3.3 எதிர்மனுதாரர்கள் திரு M. கிருஷ்ணமூர்த்தி, உதவி மின்பொறியாளர்/ கொங்கணாபுரம் மற்றும் திரு R. ஸ்ரீனிவாசன், உதவி செயற்பொறியாளர்/ புறநகர்/ எடப்பாடி, மேட்டூர் மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

3.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

4.0 **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>**:

4.1 மேல்முறையீட்டாளர் மேற்படி விலாசத்தில் குடியிருந்து வருவதாகவும், பாக்குமட்டை தொழில் செய்வதற்கு என்று மின் இணைப்பு வேண்டி 06.01.2014–இல் விண்ணப்பம் அளித்து 22.02.2014–இல் மின் இணைப்பு பெற்று பாக்குமட்டை தொழில் செய்து வந்ததாகவும், அதன் பின்னர் சுமார் நான்கு வருடங்கலாக தொழில் செய்து வந்த நிலையில் 06/2018 மாதத்திற்குரிய மின்சார தொகையை செலுத்துவதற்கு கொங்கணாபுரம் மின் வாரிய அலுவலகத்திற்கு சென்றபோது தன்னுடைய மின் இணைப்பில் அதிகபடியாக மின்சாரம் உபயோகப்பட்டதாக தெரிவித்து ரூ.82,949/– செலுத்த சொன்னதாகவும், அப்பொழுது தனக்கு ஒன்றும் புரியவில்லையென்பதால்

எவ்வித தொகையும் செலுத்தாமல் உடனே சென்றுவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

4.2 மீண்டும் கொங்கணாபுரம் மின்சார வாரிய அலுவலகத்தில் இருந்து தனக்கு தபால் வந்ததாகவும் அதில் தன்னுடைய பாக்குமட்டை தொழில் செய்வதற்கு என்று பெற்ற மின் இணைப்பில் அதிகபடியாக மின்சாரம் உபயோகித்ததாக தெரிவித்து அதற்குரிய தொகையை செலுத்த வேண்டி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும், மிகவும் மன வேதனையுடம் மின்சார வாரியத்தில் கேட்ட போது அத்தொகையை செலுத்த வேண்டும் இல்லை என்றால் தங்களது வேறு மின் இணைப்பில் சேர்த்துவிடுவோம் என்று கூறியதாகவும், அப்பொழுது மின் இணைப்பு பெற்று சுமார் நான்கு ஆண்டு காலம் கடந்த நிலையில் மின் இணைப்பு பெற்ற காலத்திலிருந்தே அதிகமாக மின்சாரம் உபயோகித்ததாக அக்கால கட்டத்திலிலேயே தெரிவித்து இருந்தால் இரண்டு machine–களை விற்றிருப்பதாகவும், தற்பொழுது தொழில் மிகவும் முடங்கி அனைத்து machine–களையும் விற்று கடன் கட்டிவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

4.3 பின்னர் தொடர்ந்து மின்வாரிய அலுவலகத்தில் இருந்து நோட்டீஸ் வந்ததால் மேட்டூர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகி மனு சமர்ப்பித்தாகவும் இது நாள் வரை எவ்வித பதிலும் கிடைக்கப்பெறாததால் மின்குறைதீர்ப்பாளரை அணுகியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

4.4 The Appellant has stated that he had obtained a supply of electricity on 22.04.2014 on payment of relevant charges under III AI, Tariff measuring load 7.39 kw. All letter from the Assistant Engineer, from Konganapuram ascribed that he utilized the Excess Demand load from the inception of service connection upto now as measuring concordant recorded demand ranging from 13.54 kw to 14.18 kw than the sanctioned demand 7.39 kw.

4.5 The Appellant has stated that it is not known as to why the Assistant Engineer failed to give notice regarding the recorded Excess demand measure as insisted in TNERC Supply code regulation 5, Sub regulation (2) "Excess demand charge". If the Assistant Engineer had already intimated

the excesses load it had been rectified by me reducing the machinery from the period 04/2014 to 2017.

4.6 The Appellant has stated that in his service connection the audit party discovered the bill was raised under wrong Tariff - IIIA1, instead of III B Tariff. Mistaken Tariff was discovered by audit party vide audit Slip No.20, dt.25.01.2018 and Slip No.17, dt.09.08.2019 for period 06/2014 to 12/2017 and 02/2018 to 06/2018.

4.7 The Appellant has stated that the electricity would become "first due" only after the bill is issued to the consumer even though the liability to pay may arise on the consumption of electricity. Applying section 56 (2) in my case, TANGEDCO raised additional demand on Slip No.20, dt.25.01.2018 and Slip No.17, dt.09.08.2019 for the period 06/2014 to 12/2017 for an amount Rs.82,949/- audit party discovered the mistake of billing under wrong Tariff III A, on 25.01.2018. The limitation period of two years under section *56 (2)* had by then already expired. As per section 17 (1) C, Limitation Act 1963, incase of mistake, the limitation period run from the date when mistake is discovered for the first time. In my case, the period of limitation would commence from the date of discovery of mistake i.e. 25.01.2018.

4.8 The Appellant has submitted that TANGEDCO never showed and raised bill Rs.82,949/- in my service connection account in the consumer ledger but issued notice only. As per section *56* (2) limitation period two years had already expired and TANGEDCO could not recover the excess demand charges for my service connection as per Electricity Act 2003.

4.9 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதத்தில் தான் சட்டத்திற்கு புறம்பாக எந்த தவறும் செய்யவில்லை எனவும், 2014–லிருந்து தன்னுடைய மின் கட்டணத்தை சரியான நேரத்தில் செலுத்திவந்துள்ளதாகவும், மின்சாரத்தை திருடவில்லை என்றும், 26.7.2018 அன்று எதிர்மனுதாரரால் திடீரேன்று audit slip என்ற பெயரில் தனக்கு ரூ.82,949/–ஐ கட்ட சொல்லி வலியுறுத்தி வந்ததாகவும், இந்நிலையில் தனக்கு முறையான தகவல் அனுப்பாததால் தன்னுடைய மின் பளுவை குறைக்கவோ, கூட்டவோ முடிவு எடுக்க இயலவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

4.10 The Appellant has prayed to order to cancel the Excess demand charges and to refund the security deposit amount of Rs.19,545/- and MCD Rs.2,500/- totally Rs.22,045/-.

## 5.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

5.1 மின் இணைப்பு எண் 113–009–2321 வீதப்பட்டி எண் III–A(1)– இல் திரு.ரமேஷ் என்பவருக்கு மின்பளு 7.39 கிவோ அடிப்படையில் 22.02.2014 அன்று வழங்கப்பட்டுள்ளது எனவும், மேற்காணும் நுகர்வோர் மின் இணைப்பு பெற்ற மாதத்திலிருந்து அனுமதிக்கப்பட்ட மின் பளுவினை காட்டிலும் அதாவது கூடுதலாக மின் பளு 13.66 கி.வோ பயன்படுத்தியுள்ளதாகவும், தொடர்ந்து மேற்காணும் மின் நுகர்வோர் அனுமதிக்கப்பட்ட மின்பளுவினை காட்டிலும் கூடுதலாக பயன்படுத்தி வந்துள்ளதாகவும், அதாவது 12/2014 மாத கணக்கீட்டின் போது 14.18 கிவோ பயன்படுத்தியுள்ளதாக நுகர்வோர் பதிவேட்டின்படி உறுதியாகியுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

5.2 தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின் வழங்கல் விதியின் படி பதிவு செய்யப்பட்ட தேவையானது ஒப்பந்தம் பெற்றத் தேவைக்கு மேற்படுமானால், தற்போதுள்ள தேவை நுகர்வோருக்கு தகவல் கொடுத்த பின்பு பதிவு செய்யப்பட்ட தேவை அளவுக்கு மாற்றப்படுதல் வேண்டும் எனவும், இதன் பேரில் கூடுதலாக பயன்படுத்தப்பட்ட கூடுதல் மின்பளுவினை 24.4.2015 அன்று ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மின்பளுவுடன் இணைக்கப்பட்டதாகவும், இதன் விவரம் நுகர்வோருக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டதன் பேரில் தான் மேற்காணும் நுகர்வோர் கடந்த 25.6.2015 அன்று பதிவு கட்டணம், வளர்ச்சி கட்டணம், மின்கட்டண நிலுவை, ஆய்வுக்கட்டணம் மற்றும் காப்புத்தொகை ஆக மொத்தம் ரூ.6419.00–ஐ 25.6.2015 அன்று செலுத்தியுள்ளதாகவும், இவருக்கு தகவல் தெரிவிக்கப்படாமல் இருந்திருந்தால் கூடுதலாக பயன்படுத்திய மின்பளுவிற்கு மேற்காணும் தொகையை செலுத்தியிருக்க இயலாது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

5.3 மேற்காணும் நடவடிக்கைக்கு பிறகு 10 HP–க்கு மேல் மின்பளு பயன்படுத்தப்படும் போது உடனடியாக வீதப்பட்டி மாற்றம் அதாவது III–A(1)–லிருந்து III–B–க்கு மாற்றம் செய்திருக்க வேண்டும். ஆனால் வீதப்பட்டி மாற்றம் செய்யப்படாமல்

இருந்த காரணத்தினால் வாரிய தணிக்கை குழு அதனை சரிசெய்து சரியான மின் கட்டண விகிதத்தை சுட்டிக்காண்பித்து அதற்குரிய வேறுபாட்டுத் தொகையினை வசூல் செய்திட கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும், அதன்படி 2014–2018–ற்கான வேறுபாட்டுத் தொகைக்கான விவரங்களை ஏற்கெனவே நுகர்வோருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

5.4 III–A(1) மின் இணைப்பிற்கு ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ள 10 HP–க்கு பதிலாக 12 கி.வா வரை பயன்படுத்தலாம் எனவும், 12 கி.வா அதிகமாகும் போது வீதப்பட்டி எண் III–B–க்கு மாற்றம் செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

5.5 வாரிய வீதப்பட்டி உத்திரவின் அடிப்படையில் வாரிய தணிக்கை குழுவால் விதிக்கப்பட்ட சராசரி தணிக்கை தொகை விவரம்:

| Month | Units | Already collected | To be collected |
|---|---|---|---|
| 06/2014 to 12/2014 | 8350 | 37309 | 14192 |
| 02/2015 | 3760 | 19161 | 6910 |
| 04/15 to 12/2017 | 28128 | 141625 | 61847 |
| 02/2018 to 07/2018 | 350 | 3276 | 3351 |

=86300+BPSC Rs.1681/- (Rs.87,981)

மேற்காணும் நுகர்வோர் கணக்கில் இருப்பில் உள்ள காப்புத் தொகை மற்றும் மின் அளவி காப்புத் தொகை விவரம் பின் வருமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| காப்புத்தொகை | ரூ.19,545/– |
|---|---|
| மின் அளவி காப்புத்தொகை | ரூ.2,500/– |
| மொத்தம் | ரூ.22,045/– |
| மின் நுகர்வோர் செலுத்த வேண்டிய தொகை (தணிக்கை தொகை மற்றும் மின் கட்டண தொகை) | ரூ.87,981 + 3,946 = 91,927/– |
| மின் நுகர்வோர் காப்புத்தொகை கழித்தது போக மீதம் உள்ள தொகை | ரூ.69,882/– as on date |

5.6 ஆகையால் மேற்படி விண்ணப்பதாரர் வாரியத்திற்கு கட்ட வேண்டிய தணிக்கை தொகை ரூ.69,882/– (ரூபாய் அறுபத்து ஒன்பதாயிரத்து எண்ணூற்று என்பத்து

இரண்டு) செலுத்துமாறும், மேல்முறையீட்டு எண் 19/2022–ஐ நிராகரிக்க வேண்டும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 6.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

6.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

6.2 கூடுதல் பளுவிற்கான வளர்ச்சி கட்டணம், பதிவு கட்டணம், ஆய்வு கட்டணம் மற்றும் காப்பு தொகை நுகர்வோரால் 25.06.2015 செலுத்திய பின்பு Tariff III–A(1)–லிருந்து Tariff III–B–க்கு மாற்றம் செய்ய வேண்டியது மற்றும் மேல்முறையீட்டாளர் தன்னுடைய முறையீட்டில் கேட்டுக் கொண்ட கூடுதல் பளுவிற்கான தொகையை ரத்து செய்யவும் தன்னுடைய மின் இணைப்பில் உள்ள பிடித்தம் செய்யப்பட்ட தொகையை திருப்பி தரும்படி கேட்பதைப் பற்றிய வினா எழுகிறது. இந்நிலையில், தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி 5(2)(III)(A) ஐ ஆராய விரும்புகிறேன்.

*"**(2) Excess demand charge***
*Whenever the consumer exceeds the sanctioned demand, excess demand charge shall be: -*
*(i) ----*
*(ii) ----*
*(III) Where the recorded demand exceeds the sanctioned demand for the second and subsequent times ,-*
*(A) In case the recorded demand has not exceeded 112 KW, the existing load sanction shall, after intimation to the consumer, be revised within one month of the second occurrence to the level of recorded demand and all the relevant charges applicable to the additional load shall be included in the next bill;"*

6.3 மேற்கண்ட விதிகளின்படி பதிவு செய்யப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு மிகையாகாத நிகழ்வில், நுகர்வோருக்கு தகவல் அளித்துவிட்டு இருந்துவரும் மின்சுமை ஒப்பளிப்பு இரண்டாவது நிகழ்விலிருந்து ஒரு மாதத்திற்குள் பதிவு செய்யப்பட்ட பேரளவு மின்தேவையின் அளவுக்கு மாற்றியமைக்கப்பட்டு மற்றும் கூடுதல் மின்சுமைக்கு பொருந்தக்கூடிய தொடர்புடைய கட்டணங்கள் அடுத்த மின்கட்டண பட்டியலில் சேர்க்கப்படுதல் வேண்டும். இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் 04/2014 மற்றும் 06/2014 ஆகிய

காலங்களில் அதிகமான மின்பளு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் 25.06.2015 அன்று தான் மின் பளு திருத்தி அமைக்கப்பட்டு மேல்முறையீட்டாளரிடமிருந்து கூடுதல் வளர்ச்சி கட்டணம், பதிவு கட்டணம், ஆய்வு கட்டணம் மற்றும் காப்பு தொகை பெறப்பட்டதாக consumer ledger வாயிலாக தெரியவருகிறது.

6.4 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண். 113-009-2321-இல் அதிகமாக மின் பளு 04/2014 மற்றும் 06/2014 மாதத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது அறிந்த நிலையில் 24.4.2015 அன்று எந்தவொரு முன் அறிவிப்பு இன்றி எதிர்மனுமாரரால் முறைப்படுத்தப்பட்டு அதற்கான கட்டணங்கள் பெறப்பட்டுள்ளது. இவ்வாறு முறைப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே இந்த மின் இணைப்பு III-A(1)-இல் வராது என்று தெரிந்த நிலையிலும் பல மாதங்கள் கழித்து ரூ.87,981/- ற்கான கேட்பு அறிவிக்கை எதிர்மனுதாரரால் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் விளக்கம்பெற நான் தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பின் விதி 9-ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***"9. Meter readings when there is changes in sanctioned demand etc.,***
>
> ****••••****
>
> *(2) Whenever a tariff change is to be effected in a service connection, such change shall be effected only after obtaining a Revised Test Report (RTR) and the reading taken shall be conclusive proof of the electricity consumed till the change of tariff."*

6.5 மேற்கண்ட விதியின்படி ஒரு மின்னிணைப்பின் மின் கட்டண வீதப்பட்டியில் மாற்றம் செய்ய வேண்டுமெனில் அத்தகைய மாற்றத்தை திருத்திய சோதனை அறிக்கை பெற்ற பின்புதான் மேற்கொள்ள வேண்டும். திருத்திய சோதனை அறிக்கைக்காக எடுக்கப்படும் மின்னளவே (reading) மின்கட்டண வீதப்பட்டி மாற்றத்திற்கு முன்பு வரை உபயோகமான மின்னளவு ஆகும்.

6.6 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதத்தில் மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பில் 10 HP-க்கு மேல் மின்பளு பயன்படுத்தப்படும் போது உடனடியாக வீதப்பட்டி மாற்றம் அதாவது III-A(1) லிருந்து III-B-க்கு மாற்றம் செய்திருக்க வேண்டும் எனவும், ஆனால் வீதப்பட்டி மாற்றம் செய்யப்படாமல் இருந்த காரணத்தினால் வாரிய தணிக்கை குழு சரியான மின் கட்டண விகிதத்தை சுட்டிக்காண்பித்த பிறகுதான் 2014-2018-ற்கான

வேறுபாட்டுத் தொகைக்கான விவரங்கள் நுகர்வோருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளதன் வாயிலாக தமிழ்நாடு மின்வழங்கல் விதிகளின்படி அவர் செயல்படவில்லை என்பதை அறிய முடிகிறது.

6.7 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி பதிவு செய்யப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு மிகையாகாத நிகழ்வில், நுகர்வோருக்கு தகவல் அளித்துவிட்டு இருந்துவரும் மின்சுமை ஒப்பளிப்பு இரண்டாவது நிகழ்விலிருந்து ஒரு மாதத்திற்குள் பதிவு செய்யப்பட்ட பேரளவு மின்தேவையின் அளவிற்கு மாற்றியமைக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் அவ்வாறு மாற்றியமைக்கப்படும் நேர்வில் மின் கட்டண வீதப்பட்டியலில் மாற்றம் ஏற்படுமானால் மின் வழங்கல் விதிகளின்படி திருத்திய சோதனை அறிக்கை நுகர்வோரிடம் பெறப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இவ்வழக்கில் எந்தவொரு விதிமுறையையும் எதிர்மனுதாரர் பின்பற்ற வில்லை. அவ்வாறு உள்ள நேர்வில் மேல்முறையீட்டாளரிடம் கோரப்பட்ட மின்கட்டண வீதப்பட்டி மாற்றத்திற்குண்டான கேட்புத்தொகை ரூ.87,981/–ஐ வசூல் செய்ய இயலாது என கருதுவதால் அந்த கேட்பு அறிவிக்கை தள்ளுபடி செய்யப்படுகிறது. மேலும், இந்த மின் இணைப்பு கணக்கு முடிக்கப்பட்டதாக தெரியவருவதால் அக்காலத்தில் இருந்த காப்பு தொகை மற்றும் மின் அளவி காப்பு தொகையில் மின் கட்டணம் நிலுவை தொகை ஏதாவது இருந்தால் சரிசெய்து மீதமுள்ள தொகையை மேல்முறையீட்டாளருக்கு திருப்பி வழங்க எதிர்மனுதாரருக்கு உத்தரவிடப்படுகிறது.

7.0 <u>**பகுப்பாய்வு:**</u>

மேல்முறையீட்டளாரின் 16.11.2011 நாளிட்ட மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் பெறப்பட்ட மனுவிற்கு 30.03.2022 அன்று தாங்கள் மின் குறைதீர்ப்பாளரிடத்தில் சென்றதால் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறுவது மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் மற்றும் மின் குறைதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதியின் 17(4)–இன் படி பொருந்தாது. நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மேல்முறையீட்டாளரின் மனுவிற்கு குறித்த காலகட்டத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால் மின்குறைதீர்ப்பாளரிடம் மேல்முறையீடு மன்றத்தில் மேல்முறையீட்டாளர் முறையிட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

**8.0 <u>முடிவுரை:</u>**

8.1 மேற்கண்ட பத்தி 6–இல் உள்ள தீர்வுகளின்படி ஒழுங்குமுறை மின்வழங்கல் விதிகளில் குறித்துரைக்கப்பட்ட நடைமுறைக்கு இணங்க முறையான அறிவிக்கை எதுவுமின்றி மேல்முறையீட்டாளரிடம் இருந்து விகிதப்பட்டி மாற்றத்திற்கான ஏற்கனவே கணக்கு முடிக்கப்பட்ட மின் இணைப்பு எண்ணில் கோரப்பட்ட தொகை ரூ.87,981/– தள்ளுபடி செய்யப்படுகிறது.

8.2 மேலும், இந்த மின் இணைப்பு கணக்கு முடிக்கப்பட்டதாக தெரியவருவதால் அக்காலத்தில் இருந்த காப்பு தொகை மற்றும் மின் அளவி காப்பு தொகையில் மின் கட்டணம் நிலுவை தொகை ஏதாவது இருந்தால் சரிசெய்து மீதமுள்ள தொகையை மேல்முறையீட்டாளருக்கு 30 நாட்களுக்குள் திருப்பி வழங்குமாறு எதிர்மனுதாரருக்கு உத்தரவிடப்படுகிறது.

8.3 மேற்கண்ட ஆணையை 30 நாட்களுக்கு நிறைவேற்றியமைக்கான அறிக்கையை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் எதிர்மனுதாரர் மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.

8.4 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு என் 19/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

(ந. கண்ணன்)
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:

1. திரு. ஜி.ரமேஷ்,
த/பெ. கோவிந்தன்,
எண் 87, கரட்டுகாடு,
கோணசமுத்திரம் அஞ்சல்,
எடப்பாடி வட்டம்,
சேலம் மாவட்டம் – 637 102.

2. உதவி மின்பொறியாளர்/கொங்கணாபுரம்,
மேட்டூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
1/3–8A1, கொங்கணாபுரம்,
எடப்பாடி – 637 102.

3. உதவி செயற்பொறியாளர்/புறநகர்/எடப்பாடி,
மேட்டூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS campus, சேலம் மெயின் ரோடு,
எடப்பாடி – 637 105.

4. செயற்பொறியாளர்/ எடப்பாடி,
மேட்டூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS campus, சேலம் மெயின் ரோடு,
எடப்பாடி – 637 105.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
மேட்டூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மேட்டூர் அனண, மேட்டூர் – 636 401.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.